# கல்நேவ பிரதேச சபை
## அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 04 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 06 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கல்நேவ பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | |
|---|---|---|---|---|---|
| | | | செலவினம் | சொத்துக்கள் | பொறுப்புக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 01 | - | 2,487 | - |
| | | 01 | - | - | 13,746 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | | | | |
| | - மேற்படி - | 03 | - | 81 | - |
| | - மேற்படி - | 01 | - | - | 11,102 |
| (இ) | நிதிக்கூற்றுகளிலிருந்து விடுபட்டவை | 04 | - | 765 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் பொருத்தமற்ற வெளிப்படுத்தல்கள் | 01 | – | – | 13 |
| | | 01 | 5 | – | – |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,335,428 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,180,828 ஆக இருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 5,673,430 கூட்டுத்தொகையான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த / மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 1..3.4 இணக்கமிண்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுடன் இணங்காமைகள் கணக்காண்வின்போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
|---|---|
| (அ) 2006 இன் 10 ஆம் இலக்க முத்திரைக் கட்டண விசேட அறிவுறுத்தல் அதிகாரச் சட்டம் | சுபையின் நானாவித வருமானங்களுக்காக அறவிடப்பட்டிருந்த ரூபா 39,921 ஆன முத்திரைக் கட்டணம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாமல் வைப்புக்கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம்** | |
| (i) 103(i) , 104(i) | சுபைக்குச் சொந்தமான கெப்வாகனம் விபத்துக்குள்ளாகியது தொடர்பாக ஆரம்ப மற்றும் இறுதிப்பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 237(ஆ) | களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது பொருட்கள் கிடைக்கப்பெற்றதாக இருப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாமல் வழங்குனர்களுக்கு 04 சந்தர்ப்பங்களில் ரூபா 225,850 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iii). 571 | 2001 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 46,870 ஆன கேள்வி வைப்புக்கள் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,783 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 817,365 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 682 | 580 | 143 | 700 | 555 | 145 |
| (ஆ) | வாடகை | 970 | 871 | 108 | 970 | 730 | 240 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 250 | 141 | 122 | 185 | 63 | 122 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 3,898 | 2,318 | 1,422 | 10,435 | 9,002 | 1,433 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்**

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 959,434 ஆன தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

**2.2.3 வீதவரிகள்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரசபைக்குட்பட்ட அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு அறிவிக்கப்பட்டு அப்பிதேசங்களில் அமைந்துள்ள ஆதனங்களிலிருந்து வருடாந்த பெறுமதி அடிப்படையில் வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்**

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபையின் அதிகாரச் சட்டத்தின் 149, 150 மற்றும் 152 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வரிகளை அறவிடுவதற்காக அதிகார பிரதேசத்தில் வர்த்தக முயற்சிகள், கைத்தொழில்கள் மற்றும் ஏனைய வியாபாரங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடொன்றை மேற்கொள்வதற்கும் அவ்விடங்களில் வருடாந்த பெறுமதி அடிப்படையில் வரி மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் ஆகியவற்றை அறவிடுவதற்கு வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 களியாட்ட வரி**

2007 திசெம்பர் 31 இற்கு முன்னைய காலப்பகுதிக்காக சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 134,797 தொகையான நிலுவை களியாட்ட வரி வருமானம் 2011 மார்ச் 31 வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.3 செலவினக் கட்டமைப்பு**

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனம் | 6,610 | 5,742 | 868 | 6,200 | 6,110 | 90 |
| ஏனையவை | 8,527 | 4,007 | 4,520 | 5,800 | 5,362 | 438 |
| உப மொத்தம் | 15,137 | 9,749 | 5,388 | 12,000 | 11,472 | 528 |
| மூலதனச் செலவினம் | 2,580 | 21,213 | (18,633) | 20,000 | 21,115 | (1,115) |
| மொத்தம் | 17,717 | 30,962 | (13,245) | 32,000 | 32,587 | (587) |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|---|
| (அ) | பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| (ஆ) | இரண்டாம் தரங்கள் | 05 | 04 |
| (இ) | ஆரம்ப தரங்கள் | 18 | 10 |
| (ஈ) | ஏனைய (அமைய / தற்காலிக) | - | 02 |
| | | 24 | 17 |

## 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

அரிசி மாவின் இணை உற்பத்திகளை பிரபல்யமடையச் செய்யும் செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக வடமத்திய மாகாண பிரதம அமைச்சிலிருந்து 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 850,000 பெறுமதியான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக கட்டிடம் ஒன்றும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையினால் அவ்வளங்கள் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 15,948,027 ஆக இருந்ததுடன் 01 ஆண்டு காலத்திற்கு மேற்பட்டிருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,620,300 ஆக இருந்தது.

### 2.5.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 682,345 ஆக இருந்தது.

### 2.5.4 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

மெய்மையாய்வுச் சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 25,431,080 ஆக இருந்தது.

## 2.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளிப்பதற்காக சபை உறுப்பினர் ஒருவருக்கு ரூபா 300 படி மீளாய்வாண்டின் போது ரூபா 28,000 செலுத்தப்பட்டிருந்த

போதிலும் அதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் மூலம் அல்லது உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட விதிகள் அல்லது அறிவுறுத்தல்கள் கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2010 ஆம் ஆண்டில் மலேசியாவில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உப தலைவர் பங்குபற்றியமைக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 88,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தாபன விதிக் கோவையின் XV ஆவது அத்தியாயத்தின் 2.1 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மகநெகும, கமநெகும நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் செய்யப்படுகின்ற வேலைகளின் மேற்பார்வைக்காக சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிருவாகச் செலவினம், உத்தியோகத்தர்களுக்கு செலுத்தக்கூடிய விடுமுறை தினச் சம்பளங்கள், மேலதிகநேரம், இணைந்த படிகள் மற்றும் பிரயாணச் செலவுகளாக மாத்திரமாக இருந்த போதிலும் அவ்வாறில்லாமல் 2009 ஆம் ஆண்டிற்காக சபைக்கு கிடைத்திருந்த நிருவாகச் செலவின நிதி ஏற்பாட்டில் ரூபா 15,500 ஆனது எவ்வித அடிப்படையுமின்றி உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்நேவ நூலகத்தில் 2008 மற்றும் 2009 ஆம் வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் 427 புத்தகங்களின் குறைவு அவதானிக்கப்பட்டதுடன் அதுதொடர்பாக பொறுப்பு வாய்ந்தவர்களை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்நெவ பொதுச் சந்தையின் கடைகளை வாடகைக்கு விட்டபோது முறையான ஒப்பந்தங்களுக்கு உடன்பட்டிராமை மற்றும் பிணை வைப்புப் பணம் பெறப்படாமை போன்ற காரணங்களினால் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் இரண்டு கடைகள் வாடகையாளரினால் கொடுப்பனவுகள்

செலுத்தப்படாதிருந்த மின்சாரக் கட்டணம் ரூபா 34,025 ஆனது சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் பொதுமக்களின் வசதிகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய செயற்பாடுகளை ஏற்படுத்துவதற்குரிய எதிர்வரும் ஆண்டுகளில் அமுல்படுத்துவதற்கு நிச்சயிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான திட்டங்களை உள்ளடக்கிய கூட்டுத்திட்டமொன்றும், மீளாய்வாண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக வழிகாட்டும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருகாமையால் சட்டத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உரிய திட்டங்கள் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.10 ஒப்பந்த நிர்வாகம்

இக்டாட் அறிவித்தல் பிரசுரத்தின் இல. 5C1 என்ற நிர்மாண ஒப்பந்த நிபந்தனைக் கோவையின் 56 ஆவது பந்தியின் பிரகாரம் செய்யப்பட்ட வேலைகளுக்கான அளவிடைகளைப் பெற்று அவ் அளவிடைகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக 2010 இன் மாகாண குறித்த வீதிகள் அபிவிருத்தியின் கீழ் செய்யப்பட்ட வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்ட இயந்திர மணித்தியாலயத்தின் அடிப்படையில் ஒப்பந்தகாரருக்கு ரூபா 1,322,701 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.11 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) கடன்பட்டோர் கட்டுப்பாடு